# தூவல்

-ஹட்டன் பிரவீனா

**என் உணர்ச்சி அலைகளில் நான் மிதக்கவிடும் கன்னிக் காகிதப்படகு.**

# தூவல்

## (கவிதைத் தொகுதி)

ஆக்கம் :-

**ஹட்டன் பிரவீனா**

[கணேஷன் பிரவீனா]

*மின்னஞ்சல் : pravei1996@gmail.com*

## கவிதைத் தொகுதி

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | "தூவல்" |
| நூலாசிரியர் | :- | ஹட்டன் பிரவீனா (கணேஷன் பிரவீனா) |
| பதிப்புரிமை © | :- | நூலாசிரியருக்கே |
| முதலாம் பதிப்பு | :- | ஆகஸ்ட் 2019 |
| உள் ஓவியங்கள் | :- | திருமதி. அஸ்மினா நஸ்ரீன் |
| தட்டச்சும் கணினிப்பதிப்பும் | :- | பா. நிர்மலா<br>Printing Fairy,<br>No. 6/2, Hatton House Road, Hatton.<br>071 0932537 |
| நூல் அளவு | :- | A5 |
| பக்கங்கள் | :- | VIII + 73 |
| விலை | :- | 300/= |
| *ISBN NO* | :- | 978-624-95370-0-2 |

© பதிப்பாசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ, நகலிடுதல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தினூடு கையளித்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.

# சமர்ப்பணம்

எனது இந்த
கவிதைத்தொகுப்பினை
என் அன்பு வாசகப் பெருமக்களுக்கு
இனிதே சமர்ப்பிக்கிறேன்.

# அணிந்துரை



செல்வி. கணேஷன் பிரவீனா ஹட்டனை வசிப்பிடமாகக் கொண்டவராவார். இவர் ஹட்டன், ஹைலன்ஸ் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வி மற்றும் உயர்கல்வியை நிறைவு செய்து தற்போது இலங்கை, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழினுட்ப பீடத்தில் பயின்று வருகிறார். இவர் "தூவல்" என்னும் தன்னுடைய முதலாவது கவிதைத் தொகுதியினை வெளியிடுவதனை எண்ணி நான் மனமகிழ்வடைகின்றேன்.

பிரவீனா தனது "தூவல்" என்னும் இக்கவிதைத் தொகுப்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளை வடித்துள்ளார். அவற்றுள் காதல், இலங்கை மலையக மக்கள், பெண்ணியம், பணம்-உறவு-நிலையாமை, கல்வியியல் தொடர்பான கவிதைகள் அடங்குவதோடு பொதுவான பார்வையுடன் சில கவிதைகளையும் யார்த்துள்ளார். பிரவீனா எழுதியுள்ள காதல் கவிதைகளில் ஏக்கம், வெறுப்பு, ஏமாற்றம், எதிர்ப்பார்ப்பு, பெருமூச்சு, மனசஞ்சலம், பதகளிப்பு, போன்ற உணர்வுகள் இழையோடுகின்றன.

எடுத்துக்காட்டாக,

"கொஞ்சம் தள்ளிப்படு" எனும் கவிதையில்,

**"எப்போதும் உன்னருகில் இடம் வேண்டும்**
**நீ மரித்தாலும் கூட"**
எனும் வரியும்,

"செத்த எலிகள்" எனும் கவிதையில்,

**"தேடித் தேடிக் களைத்துப்போய்**
**உணர்ச்சிக்காய் உருவம் காட்டி**
**உனை மட்டும் உயிராய் எண்ணி"**
எனும் வரிகளும் நீண்டு செல்கின்றன.

மலையகம் தொடர்பான கவிதைகளில் பெண்கள் தொழில் தளத்தில் அடையும் அவல நிலை, அவர்களது ஏக்க, ஏமாற்ற உணர்வுகள், மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டமை இன்னோரன்னவற்றைக் குறிப்பிடுகின்றார்.

உதாரணமாக,
"கூலிக்காக..." எனும் கவிதையில்,

**"நாளெல்லாம் கூடை சுமந்து**
**கூடையிலே பாரம் சுமந்து**
**அமுக்கி அமுக்கி நிறைத்து**
**எடுத்து வரும் கொழுந்தினை**
**நல்லது கெட்டது என**
**தரம் பிரித்து கணக்கப்பிள்ளை**
**இரண்டு இறாத்தலை வெட்டும்போது**
**பதபதைக்கும் நெஞ்சம் மறுநாளும்**
**மலைக்குச் செல்லும் கூலிக்காக"**
எனும் வரிகளை எடுத்துக்காட்டலாம்.

அவ்வாறே தற்காலத்தில் பெண்கள் ஆண்வர்க்கத்தினரால் எவ்வாறு துன்புறுத்தப்படுகின்றனர், அவமானப்படுத்தப்படுகின்றனர் என்பதனையும் எளிமையான சொற்களால் எடுத்துரைக்கிறார்.
இப்படி;
"ஊமைப்பயணம்" எனும் கவிதையில்,

**"கண்கள் முழுதும் வெறிகொள்ளும்**
**கள்ளப்பார்வை தாக்கிடவே**
**தள்ளித்தள்ளி அவள் போக"** என்று.

"காசு பணம் துட்டு மணி மணி" மற்றும் "போதும் போதுமே" எனும் கவிதைகள் மூலமாக பணமும் மனித உறவுகளும் இவ்வுலகில் ஈனமானவை, ஈரமற்றவை, நிலையற்றவை என்று கூறுவதுடன் நிலையற்ற இவற்றுக்காக மனிதர்கள்(உறவுகள்) படும் நிலைப்பாட்டினையும் எடுத்துக்கூறுகிறார். நிறைவில் பணம் என்பது வேறு, வாழ்க்கை என்பது வேறு, உறவு என்பது வேறு என்று கூறி பெருமூச்சு விடுவதை இவ்விரண்டு கவிதைகளுமே சித்திரிக்கின்றன.

"போய் வாரேன்" எனும் கவிதையில், வறுமையிலும் கல்வி கற்று உயர்கல்விக்காக பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி அங்கு போய் தன்னால் ஈடுகொடுக்க முடியாத பகிடிவதைச் சமூகத்தில் சிக்கித்தவிக்கும் ஒரு மாணவனுடைய நிலைப்பாட்டை விளக்குவதுடன் அவனது முடிவான மனநிலையையும் படம் பிடித்துக்காட்டும் பிரவீனா, மற்றொரு கல்வியியல் தொடர்பான "என்ன செய்வது" எனும் கவிதையில், ஒரு மாணவன் பரீட்சை மண்டபத்தில் தனது வினாத்தாளை எப்படிப்பட்டதோர் மனநிலையில் எதிர்ப்பார்த்திருப்பான் என்பதையும் வித்தியாசமான பார்வையில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

பொதுவான நோக்கில் சில கவிதைகளைப் படைத்துள்ள பிரவீனா "மரண மூச்சு", "கடவுள் எங்கே?", "நாட்குறிப்பும் பேசுகிறது", "வெள்ளைத்தேங்காய்கள்", "தேநீர்க்காதல்" போன்றவற்றில் யதார்த்தத்தினைக் கூறுகிறார்.

மரண மூச்சில் வாழ்க்கை என்பது வெறும் மாயை என்பதனை,

**"என்னவோ நியாயம் இருக்கட்டும்**
**ஏதேதோ மாயம் நடக்கட்டும்**
**எல்லாமே ஒரு மாயை என்று**
**மரண மூச்சு உணர்த்திவிடும்"**
என்கிறார்.

அவ்வாறே, கடவுள் எங்கே எனும் கவிதையில், கடவுள் அவரவர் மனத்தினுள்ளே இருக்கிறார் என்பதனை வலியுறுத்துகிறார். மேலும், "கவிஞனும் தாயானான்!" எனும் கவிதையில் ஒரு கவிஞனின் மனவுணர்வை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். இவ்வாறாக பல்வேறு விடயங்களை கவிதை மூலமாகத் தொட்டுச்செல்கிறார். இவரது கவிதைகள் மரபுக்கவிதை, நவீனக்கவிதை, புதுக்கவிதை, வசனக்கவிதை போன்ற வடிவங்களில் காணப்படுகின்றன. மேலும், எளிமையான சொற்களைக் கொண்டவையாகவும் பேச்சு மொழிப் பாங்கிலும் நியம மொழியாகவும் காணப்படுகின்றன.

நிறைவாகக் கூறுமிடத்து, இன்றைய காலகட்டத்தில் புற்றீசலாக வெளிப்படுகின்ற மலையக இளம் படைப்பாளிகளின் பட்டியலில் பிரவீனாவும் இடம்பிடித்திருப்பது மகிழ்வைத்தருகிறது. இத்தோடு தன் படைப்புத்திறனை நிறுத்திவிடாது இன்னும் பல்வேறு வகையான படைப்புக்கள் மூலமாக தமிழ் இலக்கிய உலகில் வலம் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இத் "தூவல்" எனும் படைப்புக்கு என் உளமார்ந்த வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்த்துக்களுடன்
என்றும் அன்புடன்,

***ம.ஸ்டாலின் சிவஞானஜோதி***
***வளவாளர்,***
***வலயக் கல்விப் பணிமனை,***
***ஹட்டன்.***

# வாழ்த்துரை



செல்வி. கணேஷன் பிரவீனா அவர்களின் கவிதைகளைப் படிக்கும் போது மலையகக் கவிதை வரலாறு பற்றி நோக்க வேண்டியதாகின்றது. இவரின் அநேகக் கவிதைகள் மலையகத் தேநீர் சுவை கொண்டவையாகக் காணப்படுகின்றன என்றால் அது மிகையில்லை. மலையகம் சார்ந்த இலக்கியத் துறைகளுள் கவிதை என்பது நீண்ட காலப் பாரம்பரியத்தைக் கொண்டதாகும். கவிதை இலக்கியத்தின் வரலாற்றை நோக்கின், இதன் தோற்றுவாயாக வாய்மொழிப்பாடல்களே அமைகின்றன. அவ்வகையில் இவரது கவிதைகள் மலையக மக்களது வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிப்பனவாக காணப்படுகின்றன.

இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் முற்போக்குப் புரட்சிக்கு வித்திடும் ஒரு அடையாளமாக, தமக்கேயுரிய அழகியல் பெறுமானங்களுடன் கலையாற்றல் மிளிரும் வகையில் புனையப்பட்டுள்ளமை கண்கூடாகும். சமூக வாழ்வியலைப் பொறுத்தவரையில் கணவன்-மனைவி உறவு, குடும்ப உறவுகள், பிள்ளைகளின் எதிர்ப்பார்ப்புக்கள் என வாழ்வியல் நிதர்சன உண்மைகளை பக்குவமாகவும் ஆணித்தரமாகவும் யதார்த்தமான பாணியில் விளம்பியுள்ளார். சிதறிப்போன சமூகப் பின்னலையும், நூலறுந்து நிற்கும் சமூக இடைவெளிகளையும், அவற்றினூடே தோய்ந்து மிதந்து வரும் மனவெழுச்சிகளையும் அழகுற எடுத்துக்காட்டிடும் ஒரு பன்முக அரங்காக இந்நூல் விளங்குகிறது.

பள்ளிப்பருவத்திலிருந்தே கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதுவதில் ஆர்வம் காட்டி வந்த இவர் தனது பள்ளிக்காலத்தில் பல போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுள்ளார். இவரது படைப்புக்கள் இணைய வழியில் வெளியாகி வருகின்றமை வரவேற்கத்தக்கது. இவர் தற்போது இலக்கியத் துறைக்குள் எழுத்தாளராக அடியெடுத்து வைத்துள்ளமையை எண்ணி மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன். நீண்டும் குறுகியும் கவிதைகளாக மலர்ந்து பரிணமிக்கும் ஆசிரியரின் நம்பிக்கைப் பூக்கள் அவரது வாழ்க்கை எனும் நெடுவழி எங்கிலும் மேலும் பல நூல்களாக பூத்துக்குலுங்க மீண்டும் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ந. கிருஷ்ணவேணி*
*ஆசிரியை*
*பன்மூர், தமிழ் மகா வித்தியாலயம்.*

# இதயம் பேசுகிறது...

'தூவல்' நான் விழைந்ததில் விளைந்த முதலாவது ஆவணத் தொகுப்பாகும். இதுவரை எதை சாதித்தேனென மீண்டும் மீண்டும் யோசித்துப்பார்த்தேன். பின்புதான் புரிந்தது, நான் வாழ்வில் சாதிக்கவில்லை, இருபத்துமூன்று வருடங்களாக வாழ்வை சமாளித்துக் கொண்டிருக்கிறேன் என்று. எனது ஓட்டத்தில் 'தூவல்' எனும் இப்பனுவலுக்கும் பாரிய பங்குண்டு.

எனது வாழ்க்கைப் போராட்டத்தின் இடைநடுவே என் மனதில் தோன்றிய எண்ணங்கள் நான் மரணித்த பின்பும் எங்கோ ஓர் மூலையில் என் நினைவுகளைத் தாங்கி நிற்கட்டும் என்ற உணர்ச்சி அலைகளில் நான் மிதக்கவிடும் முதலாவது காகிதப்படகே இப்பனுவலாகும். எனது எண்ணவெழுச்சிகளை அழகுறக்கோர்த்து அதற்கு என்ன பெயர் வைக்கலாமென எண்ணியபோது என் மனக்கண்ணில் தோன்றிய முதலாவது பொருள் "பேனை" ஆகும். எழுதுபவர்கள் அனைவரினதும் சிந்தையில் முதலில் தென்படுவதும் அதுவேதான். ஆக, நானொன்றும் விதிவிலக்கல்ல! "பேனை" என்பது இலங்கைத்தமிழ் வார்த்தை, "பேனா" என்பது இந்தியத்தமிழ் வார்த்தை. ஆக, "பேனை" க்கான தூயத்தமிழ் வார்த்தையான 'தூவல்' என்பதை என் நூலுக்கு நாமமாகச் சூடித்தந்தேன். எனது உள வெளிப்பாடுகள் பாமரனுக்கும் புரியவேண்டும் என்ற நோக்கம் என் மனதில் வேரூன்றி நிற்பதனால் நான் என் படைப்புக்களில் எளிய சொல்லாடலைக் கையாளுவது வழக்கம்.

இப்பனுவலுக்கு அணிந்துரை வழங்கிய திரு. ஸ்டாலின் சிவஞானஜோதி (வளவாளர், வலயக்கல்விப் பணிமனை, ஹட்டன்) அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய திருமதி. ந.கிருஷ்ணவேணி(ஆசிரியை - பன்மூர், தமிழ் மகா வித்தியாலயம்)அவர்களுக்கும், உள் ஓவியங்களை வழங்கிய இனிய நண்பி அஸ்மினாவிற்கும் தட்டச்சும் கணினிப்பதிப்பும் வழங்கிய பா. நிர்மலா (Printing Fairy,Hatton) அவர்களுக்கும், புத்தகங்களை அச்சிட்டுத் தந்த கொழும்பு, நவசக்தி அச்சகத்திற்கும் என் மனமார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சாதிப்பதற்கான பயணம் சாகும்வரை தொடர அவா! காலம் இட்டுச்செல்லும் பாதையில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறேன். இப்பனுவலில் ஏதேனும் தவறிருப்பின் மன்னித்தருளுக!

*பிரவீனா*
*ஹட்டன்*
*மின்னஞ்சல் : praveil996@gmail.com*

# அகத்தில்...


- கூலிக்காக...
- நிகழ்காலப்பிணங்கள்
- நினைவோடு மட்டும்
- பாதம் வேண்டும்
- ஊமைப்பயணம்
- வேலைக்காரனாய்
- கொஞ்சம் தள்ளிப்படு
- பனிப்பூவே சொல்லடி!
- போய் வாரேன்
- தக்காளி
- அவளே என்னவள்
- காசு பணம் துட்டு மணி! மணி!
- உடை(ந்/த்)த கண்ணாடி
- போதும் போதுமே!
- என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!
- மடுவக்கல்வி
- கல்யாண மாயை
- செத்த எலிகள்
- கடவுள் எங்கே?
- நாட்குறிப்பும் பேசுகிறது...
- நெஞ்சு கனக்குது
- தொடலியாய் நான்
- கவிஞனும் தாயானான்!
- உன் கோபம்
- வீதியோரக் குப்பை

- தென்னிந்தியா தள்ளிய சிசுக்கள்!
- மழைக்காதல்
- விதவை நான்
- வெள்ளைத் தேங்காய்கள்
- உயிரிழுத்த உயிரெழுத்து
- தனிமை
- தெரியவில்லை
- மனமெனும் கதவு
- தேநீர்க்காதல்
- கூற்றுவன் நான்
- வருவாயா வழித்துணையாய்
- பிரிவினை
- தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா?
- காதல் சொல்லவோ வந்தாய்?
- உன் அகலிகை கல்லானேன்
- சக்கைகள்
- கட்டிப்போட்டாயோ நீ
- என்ன செய்வது?
- நாகரிகப் பிறழ்ச்சி
- மரண மூச்சு

**கூலிக்காக...**

கங்காணி ஒருபுறம்
கணக்கப்பிள்ளை மறுபுறம்
பார்வைகளை அள்ளி வீச,
சேலையை இழுத்து தோள்வழியே
மார்பை மூடிக்கொள்ளும்
மலையகத்துப் பெண்கள்
கூலிக்காக கொழுந்தெடுக்கும்
நிலையை பிரித்தானியன்
தந்து சென்றானே!


நேரம் தவறிச் சென்று
ஏச்சுப் பேச்சு வாங்கி
இறாத்தல் குறைந்தால்
சம்பளம் குறையுமே என்று
காலைப்பனியில் நடுநடுங்கி
வெடுக் வெடுக்கென்று கிள்ளித்
தள்ளும் பெண்களின்
இளம் விரல்கள் ஏன்
கம்பியூட்டரைத் தட்டாதா?

மெத்தப் படித்த மேதாவி
ஏதேதோ கண்டுபிடித்தானே...
எந்திரம் என்றான் எந்திரன் என்றான்
மலையகப் பெண்களைக் காட்டிலும்
ஒரு எந்திரன் இருந்துவிடுவானா?
பெற்ற பிள்ளையை பிள்ளைக்
காம்பராவில் விட்டு வந்து
இராப்பகலாய் கொழுந்து கிள்ளும்
பெண்களின் நிலை பரிதாபம்!

ஆளுக்கொரு நிரையில்
மணிக்கணக்காக ஆய்ந்து
நிறுவை நேரம் வந்ததும்
கால்கடுக்க வரிசையில் நின்று
மெல்ல மெல்ல நகர்ந்து
முன்னேறிச் சென்று
தன் கொழுந்தைத் தூக்கி
தராசுத்தட்டில் நிறுத்த முன்பு
இடுப்பு முறிந்து விடும்!

நாளெல்லாம் கூடை சுமந்து
கூடையிலே பாரம் சுமந்து
அமுக்கி அமுக்கி நிறைத்து
எடுத்து வரும் கொழுந்தினை
நல்லது கெட்டது என
தரம் பிரித்து கணக்கப்பிள்ளை
இரண்டு இறாத்தலை வெட்டும்போது
பதபதைக்கும் நெஞ்சம் மறுநாளும்
மலைக்குச் செல்லும் கூலிக்காக!

இறாத்தல்-எடையைக் குறிக்கும் பிரித்தானியப் பேரரசிய அலகு
பிள்ளைக் காம்பரா-பிள்ளைகளைப் பராமரிக்கும் இடம்



## நிகழ்காலப்பிணங்கள்

வானவில் பார்த்து ரசித்தோம்
வாழ்க்கைத் தேடி அலைகிறோம்
கனவுகள் கண்டு களித்தோம்
கற்பினை விலைக்கு விற்கிறோம்
பருவங்கள் பூத்து மகிழ்ந்தோம்
புருவங்கள் தூக்கித் திரிகிறோம்

நட்புக்காய் உயிரையும் கொடுத்தோம்
நண்பனாய் பொய்யாய் நடிக்கிறோம்
அன்பினை தூய்மையாய் செய்தோம்
காதலைக் கேவலம் செய்கிறோம்
பாடங்கள் கற்று உயர்ந்தோம்
போதைகள் உற்று விழுகிறோம்


தூக்கணாங்குருவி ரசித்தோம்
தூக்கிலே தொங்கி மாய்கிறோம்
வயலைக் கடவுளாய் போற்றினோம்
மண்ணில் புதையுண்டு அழிகிறோம்
நதிகள் கண்டு வியந்தோம்
நீரை விஷமெனக் குடிக்கிறோம்

கண்கள் பார்த்து பிரகாசித்தோம்
குருடராய்ப் பார்வை இழக்கிறோம்
ரயில் பெட்டிகளாய்த் தொடர்ந்தோம்
தண்டவாளங்களாய்ப் பிரிகிறோம்
நாம் கொண்ட மாற்றம் எம்மை
நிகழ்காலப் பிணங்களாக்கவே!

## நினைவோடு மட்டும்

நெருப்பை நெருங்கி
விரலை சுடுகிறேன்
கிணற்றைத் தேடி
அலைகள் அளக்கிறேன்
கிளிஞ்சல் எடுத்து
வீடும் அமைக்கிறேன்
காகம் பார்த்து
பாடு என்கிறேன்
தேகம் கண்டால்
முகமோ சிவக்கிறேன்
பனியைத் தொட்டு
பன்னீர் தெளிக்கிறேன்
மழையைப் பார்த்து
மண்ணை மிதிக்கிறேன்
கண்கள் திறந்தும்
கனவில் மிதக்கிறேன்
நகங்கள் கடித்து
பிறையிடம் நகைக்கிறேன்
தொட்டாற்சிணுங்கி
தொட்டே சிரிக்கிறேன்
பட்டாம்பூச்சியை
எட்டிப் பிடிக்கிறேன்
சாளரம் வழியே
சாகசம் புரிகிறேன்
பாம்பைக் கண்டால்
பாவம் என்கிறேன்
பாதம் பார்த்து
பாலாய் வழிகிறேன்

குடுமி பறித்து
தேங்காய் ரசிக்கிறேன்
உப்பில் நனைத்து
மாங்காய் ருசிக்கிறேன்
எழுதி எழுதி
படித்துப் பார்க்கிறேன்
அழித்து அழித்து
எழுத யோசிக்கிறேன்
திருடிய இதயத்தை
திருப்பிக் கேட்கிறேன்
வாங்கிய காதலை
உனக்கே தருகிறேன்
கணுக்கால் நனைய
கடலில் நடக்கிறேன்
நண்டைக் கண்டு
நக்கல் செய்கிறேன்
பேனா எடுத்தால்
தானாய் வரைகிறேன்
பூக்கள் பூத்தால்
கனிந்து மகிழ்கிறேன்
விடியல் வந்தால்
விம்மி விழுகிறேன்
உன்னை நினைத்தால்
பம்மி ஒளிகிறேன்
கன்னம் துடிக்க
கதறி அழுகிறேன்
பெயரைக் கூறியே
காலம் மறக்கிறேன்
நினைவோடு மட்டும்
காதல் நீட்டிக்கிறேன்...



## பாதம் வேண்டும்

நீ நடந்த சுவடைத் தேடி
நாம் நடந்த பாதை தனிலே
நித்தம் நித்தம் திரிகிறேன்
நீயில்லை; உன் சுவடுமில்லை!

கால் பதித்துப் பார்க்கிறேன்
உன் துகளாவது ஒட்டுமா?
என் கண்மணியே இல்லையடி
ஒரு அணு கூட உன் நினைவாய்!

பஞ்சு மெத்தை உன் பாதம்
கெஞ்சுதடி என் நெஞ்சம்
கொஞ்சமாச்சும் தஞ்சம்
நீ தராமல் ஏனோ வஞ்சம்!


முகம் துடைக்க தந்தாய்
முத்தம் பதிக்க தந்தாய்
மன்னிப்புக்கு மறுக்கிறாய்
முள்ளாய்க் குத்துதடி உன் பாதம்!

வலித்தால் பிடித்தேன்
பிடித்தால் கடித்தேன்
கடித்தால் நடித்தேன்
நடித்தால் துடித்தாயே!

பத்து விரலும் எனக்கே என
பொத்தி பொத்தி நான் காக்க
மெட்டி போடும் தருணம் எனை
உதறித் தள்ளி நீ போக!


உனையிழந்த பாவி நான்
எனையிழந்த ஆவி நீ
காலமும்தான் கூடாதோ
உன் பாதம் நான் விழுந்திட!

என் நெஞ்சில் உன் கோபம்
எத்தித்தள்ளித் தாக்கினாய்
மீண்டும் வருமா ஏறிமிதிக்க
நம் குழந்தையின் பாதமாவது!



## ஊமைப்பயணம்

நிறைந்து வழியும் சனக்கூட்டம்
இடையை வருடும் பேய்க்கூட்டம்!
தொங்கித் தொங்கிப் போயிடவே
தூக்கில் தொங்கும் மாயையது!



திறந்து கிடக்கும் சாளரங்கள்
கொண்டு சேர்க்கும் தென்றலுமே
முதுகைத்தடவும் நாய்களையும்
முத்தம் தந்து செல்கிறதே!

கண்கள் முழுதும் வெறிகொள்ளும்
கள்ளப்பார்வை தாக்கிடவே
தள்ளித்தள்ளி அவள் போக
துள்ளிவந்து கால்மிதிப்பான்!

அந்த மிதியும் போதாதென
சாரதி மிதிப்பான் மறுமிதியை
கொடுமை அறியா கோவலனோ
கொன்றுவிட்டே போய்விடுவான்!

இதுதான் நல்ல வாய்ப்பாக
தாவி வந்து மார்பழுத்த
பெண்மை துடிக்கும் மறுகணமே
தன் தாயின் தாய்மை கொன்றானே!

ஏறும் கோபம் மறைத்திட்டே
பேசும் வார்த்தை விழுங்கிட்டே
பம்மிப்பம்பிக் கைநகர்த்தும்
ஆசனக் கம்பி வலியறியும்!

பயணிகள் என்ற பெயரினிலே
பயணம் கொள்ளும் பெண்களுமே
காமம் என்னும் பெரும்பொறியில்
விழுந்து மாய்வதோ இப்பயணம்?

## வேலைக்காரனாய்!

உதடுகள் தடதடவென அடித்துக்கொள்ள
கறை படிந்த கைகள் வெடவெடத்துப்போக
வைகறைப் பனித்தூமத்தின் மத்தியிலே
கதிரவன் கைநீட்டிப் பாய்கையிலே
களங்கமற்ற கண்களோ கூசிப்போக
கனவுகளுடன் கவ்வாத்து வெட்டும்
கனிவான இதயங்கள்
இன்னும் எத்தனை காலத்திற்கு
பச்சைத்தேயிலை மலைமுகட்டில்
கால்கடுக்க நின்றாய்ந்து
வெள்ளையனுக்கே வேலைக்காரனாய்!



## கொஞ்சம் தள்ளிப்படு

அருகருகே உரசி அழகாய் அமர்ந்து
உன் கைக்கோர்த்து முகம் சிணுங்கி
கழுத்தில் வாங்கிக் கொண்டது
தாலி எனும் தூக்குக்கயிறா,
இல்லை மலர்த்தூவி பரிகசித்து
ஸ்பரிசம் பகிர்ந்து உடலிணைந்து
உன் காதலில் என்னை இணைத்தது
கலவி என்னும் கல்லறைச்சுவரா...?

ஆயிரம் வண்ணம் நிறைந்த
மணவறையின் பூக்களையும்
அழகாய்த்தூவி அடுக்கி வரைந்த
படுக்கையறையின் பூக்களையும்
இன்று மொத்தமாய் ஏந்திக்கொண்டு
தனியாய்ப் படுத்துக்கிடக்கின்றாயே
பாதியை நான் சுமந்து பாதையில்
வருவேனா, பாவியாகிப்போவேனா...?

இதயத்தைப் பெட்டியில் வைத்து
பாதுகாப்பேன் எனக் கூறியிருந்த
வார்த்தையுமே சாபமாகிப் பெட்டியில்
புதையுண்டு உனைப் புதைக்கிறதா,
இரண்டாய் இருந்து முதலிரவில்
ஒன்றாய்த் துடித்த இதயங்கள்
இன்று இரண்டாகிப்போய் மீண்டும்
ஒன்றாய்த் துடித்துப் பதைக்கிறதா...?

வேண்டாம் வேண்டாம் தனியாய்த்
துடித்திட வேண்டாம் என் இதயம்
போதும் போதும் பூக்களை விலக்கு
கனத்தை நீ சுமந்தது போதும்
கொஞ்சம் தள்ளிப்படு, நானும்
வருகிறேன் உன்னருகில் உரசிட,
முதலிரவும் முடிவிரவும் நம் உடல்
இணைந்ததாகவே இருக்கட்டுமே...

***எப்போதும் உன்னருகில் இடம் வேண்டும்
நீ மரித்தாலும் கூட□***



## பனிப்பூவே சொல்லடி!

உன்னை முதலில்
பார்த்தது நான்தானடி!
மெய்சிலிர்த்தேன்...
கைப்பிசைந்தேன்...
பார்ப்பாயா பார்ப்பாயா என
பார்த்துக்கொண்டிருந்தேனடி!

பார்த்தாயே பனிப்பூவே
பலவருடம் கழித்துப் பூத்ததாய்!
பருவம் பூத்தேன்...
உறவுகள் நீத்தேன்...
வருவாயா வருவாயா என
காத்துக்கொண்டிருந்தேனடி!


வந்தாயே தேவதையே
என் வாழ்வில் வானிலையாய்!
நம்பாமல் திகைத்தேன்...
உனை நம்பி அணைத்தேன்...
தருவாயா தருவாயா என
கேட்டுக்கொண்டிருந்தேனடி!

தந்தாயே தாரகையே
நான் கேளாததையும் நீயாய்!
அழகைப் பார்த்தேன்...
ஆசை வளர்த்தேன்...
புரிவாயா புரிவாயா என
ஏங்கிக்கொண்டிருந்தேனடி!

புரிந்தாயே பூவனமே
என் மனமறிந்த வண்ணமாய்!
பிணியில் நீங்கினேன்...
பிறவிப்பயன் அறிந்தேன்...
போவாயோ போவாயோ என
கேட்டுக்கொண்டிருந்தாயேடி!

போய்விட்டேனே விண்மீனே
உனையள்ளி எறிந்தவனாய்!
புழுவாய்த் துடிக்கிறேன்...
புதிதாய் அழுகிறேன்...
வருவேனா வருவேனா என
வருந்திக்கொண்டிருக்கிறேனடி!

வந்தால் ஏற்பாயா...? இல்லை,
வலிகள் காப்பாயா...?
எனை மன்னிப்பாயா...? இல்லை,
மரணிப்பாயா...?
சொல்லடி சொர்க்கமே!
உள்ளதை உள்ளபடி!



## போய் வாரேன்

உச்சி வெயிலுல
உச்சந்தல உசிர்குடிக்க
முதுகுல கொழுந்துக்கூட
அங்க இங்க சாய சாய
கோண மலையெல்லாம்
கோணிக் கோணி அவ நடந்து
கங்காணி பேச்செல்லாம்
காது நனைய வாங்கிக்கிட்டு
ஏங்கி ஏங்கி கொழுந்து கிள்ளி
வெறகடுப்ப ஊதி ஊதி
புகையெல்லாம் மூச்சிழுக்க
புஸ்தகமும் வாங்கிக்குடுத்து
போய்வாடான்னு அனுப்பி வெச்சா!

அவளோட கஸ்டத்துக்கு
நான் ஏந்தான் பொறந்தேனோ
தலையிலயும் அடிச்சிக்குவேன்
நல்லாவே படிக்கணும்னு!
காஞ்சிப் போன ரொட்டித்துண்டு
கால் வயிறு நெறையாது
ஆனாலும் அத தந்த
அவ கைய நெனெச்சா
மனசெல்லாம் நெறஞ்சிப்போகும்!
முக்கி முக்கி படிச்சிப்புட்டே(ன்)
ஏ எல்லும் பாஸ் பண்ணிட்டே(ன்)
இதத்தவிர எங்கம்மாவுக்கு
வேறொன்னும் பண்ணிடல!

என்னையுந்தாங் கூப்புட்டாங்க
தேயில மலையில கொழுந்து கிள்ள
பொத்தி பொத்தி வளத்த அம்மா
கங்காணிய ஏசிப்புட்டா!
அவளோட வீராப்பு
நான் நல்லா வந்துடனும்
கெஞ்சிக் கெஞ்சிப் பிச்ச எடுத்து
ராப்பகலா கொழுந்து ஆஞ்சி
கெம்பஸுக்கும் அனுப்பி வெச்சா!
ஆயிரங்கண்ணு சட்டையோட
நானும் வாசலடி போகையில
வாடிப்போன எங்கம்மா கண்ணீரு
என் சட்டையத்தான் நனைச்சதுங்க!

சீனியருன்னு சொன்னாங்க
வணக்கமும் வெச்சிப்புட்டே(ன்)
முழுக்கை சட்ட போடனுமாம்
சப்பாத்து வேற வேணுமாமே...
ஒரு வேள கஞ்சி குடிச்சி
மூனு வேள சோறு போட்டா
அவகிட்ட போயி எப்புடி கேப்பேன்
சப்பாத்தும் சட்டையும் வாங்கித்தான்னு!
மணிக்கணக்கா நிக்கனுமாம்
ஃபோன் பண்ணி பேசனுமாம்
ஃபோனெல்லாம் நா(ன்) பாத்ததில்ல
என்ன செய்வேன் பாதையில...
கதறிக் கதறி அழுதாலும்
அவ மடி இல்ல பக்கத்துல
தல சாஞ்சி நாந்தூங்க!

கண்ட நேரம் கூப்புட்றாங்க
டான்ஸும் ஆட சொல்லுறாங்க
சொந்த தம்பியா இருந்தா
நிர்வாணமா பாப்பாங்களா...
அப்பாவ பாத்ததில்ல
ரொம்ப வருசமா தூங்குறாரு
தேயிலத் தூறுக்கு அடியிலத்தா(ன்)
என்னப் போயி தூயத்தமிழ் பேசுடான்னா
நா(ன்) என்ன வள்ளுவரோட புள்ளையாங்க?

சிரேஷ்ட மாணவருன்னு சொல்லிக்கிறிங்க
மரியாதய நா(ன்) தந்துப்புட்டே(ன்)
தயவு பண்ணி சொல்லிடாதிங்க
காசு மட்டும் தந்துட்டு போன்னு!
மண்ணு அள்ளி விளையாண்டே(ன்)
சோறு போடும் தேயில மலையில
என்ன பாத்துக்கிட்ட தேவதைக்கு
நா(ன்) வாங்கித்தரனும் பட்டு சேல!

என்னப்போல வந்தவ ஒருத்தி
தினமும் அழுகுறா தேம்பித்தேம்பி
சுடிதார் வாங்க அவக்கிட்டயும்
காசில்லயாம் என்னப்பண்ண!
சிங்களவன் நெனச்சிக்கிட்டான்
இதுதான் தமிழ் கலாசாரமுன்னு
எவன்டா சேத்தான் சுடிதார
நம்ம ஊரு கலாசாரத்துல!

நாட்டுல ஆயிரத்தெட்டு பிரச்சினங்க
அரசியலமைப்பே பொறண்டு கெடக்குது
படிக்க வந்த சிறுசுக்கெல்லாம்
எதுக்கு இந்த வீண் வேல?
எங்கம்மா கெடக்குறா மடுவத்துல
என்ன நெனெச்சி நொந்துக்கிட்டு
நா(ன்) வரல இந்த விளாட்டுக்கு
நானும் எங்கயாவது வேலைக்கி போறே(ன்)
எங்கம்மாவுக்கு ஒரு சேல வாங்கனும்!

போய் வாரேன்...

மடுவம்-கொழுந்து நிறுவை செய்யும் இடம்



## தக்காளி

அத்தான்! என்றேன் அசரவில்லை!
மச்சான்! என்றேன் மசியவில்லை!
மாமா! என்றேன் வேண்டாம் என்றாய்...
கள்வா! என்றேன் கண்ணிமைத்தாய்!
கறுப்பா! என்றேன் கைப்பிடித்தாய்!!!

என் காதுக்கினிதாய் - நீ
கானம் பாட,
உன் மனதிற்கினிதாய் - நான்
தோளில் சாய,
என் எண்ணமெல்லாம்- உன்
ஆசை தோய,
கனவுகள் மட்டும் - என்
கண்களில் சிக்கிக் கொள்ள...

பொய்யாகியும் போனதோ
நம் ஆசை வாழ்க்கை!!!
மெய்யாக்கியும் விடுமா
இனி வரும் வாழ்க்கை ?
என்றும் நீயே வேண்டும்,
உன் தோளில் சாய்ந்து
உன் மார்பில் மிதந்து,
உன் மடியில் தவழ்ந்து,
உன் கருவை சுமந்து,
உன் காலடியில் கிடக்க...

கறுப்பா!!!
வரம் கொடு
உன் ஆசை தக்காளி
உயிர் விடும் பொழுதிலாவது
உன் மடியில் தவழ...

## அவளே என்னவள்

அவளின் கண்ணீரைக் கடலாக்கி
என் மனமெனும் குழியில்
ஊற்றிவிட்டேன்
பார்வையெனும் ஈட்டியினை நுனியுடைத்து
பாதாளத்தில் பதுக்கித்
திணித்துவிட்டேன்

இதழோரத்து குமின்சரிப்பை
இன்று சிலுவைகள்
ஏந்தச் செய்தேன்
அவளது கவிதைகளைக் கசக்கி
ஓட்டிற்குள் புகுந்த
ஆமைகளாக்கினேன்

என்னவள் குரலைக் குமுறலாக்கி
கற்பாறைகளுக்கு இடையில்
புதைத்துவிட்டேன்
கர்ப்பத்தைக் கனலாக்கி
கனிவின்றி காக்கைக்கு
இரையாய் இட்டேன்



அவளது கருப்பையைக் கழற்றி
மின்கம்பிகளில் உணர்வின்றி
காயப்போட்டேன்
இதயத்தைக் கசக்கிப்பிழிந்து
குருதியைச் சுவைத்துப்
பார்த்தேன்

நிழலை நிர்மூலமாக்கி
நிர்க்கதியாய் அலையவிட்டேன்
இருந்தும்கூட,
என்னுயிரை ஆள்கிறாள்...
அவளே என்னவள்!

## காசு! பணம்! துட்டு! மணி மணி!

அறிவிலிகளே! பணம் ஒரு பாடா?
அன்பு மறந்து பண்பு மறந்து
மனிதரை மனிதர் கொச்சப்படுத்தி
வாழுகின்ற இவ்வாழ்வு தனிலே
எங்கிருந்து வந்தது பணம்?
மூளையைக் கழுவி தேடுங்கள்...

நீ உருவாக்கிய வெற்றுக்காகிதம்
உன்னையே ஆளுகிறதே,
கண்ணைத் திறந்து பார்
நீ குருடன் என்று தெரியும்
நீ படைத்த ஒன்றுக்கு நீயே
அடிமையாய் இருக்கிறாயே!

அது உன்னைப் பார்த்து
சிரிக்கத்தானடா செய்யும்
நீதான் செருப்பைத் தூக்கி
தலையில செருகிக் கொண்டாயே!
கொஞ்சம் அண்ணாந்து பாரடா
உன் தலை எவ்வளவு அழுக்கென்று!


பணத்திற்காக அலைகிறாய்
கீழே விழின் ஒற்றிக்கொள்கிறாய்
முட்டாளே! முன்னால் பாரடா
உன் தாய் இருக்கிறாள்!
தாயைத்தூக்கி தலையில் வை!
பணத்தைத் தூக்கி காலில் வை!

உனக்கு உறவுகள் எதுவரை?
உன்னிடம் பணம் இருக்கும் வரை
ஆசை மனைவி எதுவரை?
கேட்டபோது பணம் தரும் வரை
பெற்ற குழந்தை எதுவரை?
கேட்டது வாங்கித்தரும் வரை

இதுதானடா வாழ்க்கை
நீ உயிர் கொடுத்த காகிதம்
உன்னுயிரைக் குடிப்பது
இன்றுனக்குத் தெரியாதடா!
நிதர்சனம் புரியாமல் அடிமை
மாடாய் வாழ்ந்து செத்துமடி!

பணம் சூழ்ந்த இவ்வுலகிலே
வேதெற்கு இடமுண்டு...
விரையுங்கள் தோழர்களே!
பதுக்குங்கள் நோட்டுகளை,
அதைத்தான் புசிக்கவிருக்கிறது
நாளைய பணப்பேய் சமுதாயம்!!!

**காசு□ பணம்□ துட்டு□ மணி□ மணி□**
**காசு□ பணம்□ துட்டு□ மணி□ மணி□**



## உடை(ந்/த்)த கண்ணாடி

ஒன்ன பா(ர்)க்க ஓடி வந்தே(ன்)
ஒன்ன சேரத் தேடி வந்தே(ன்)
எங்க போன நீயு(ம்)
என்ன விட்டு ஓரமா...

துடிச்சே(ன்) தவிச்சே(ன்)
கதறித்தா(ன்) அழுதேனே!
ஒனக்கு ஒன்னும் கேக்கலியா
ஒன்ன நானும் கூப்புடுறது...

நீ தூக்கிப் போட்ட நானும்
தூக்குல தொங்க வேணும்
ஒன்ன உசுரா சுமந்துக்கிட்டு
தொங்கிடவும் மனசில்ல...

மனச நீயு(ம்) ஒடச்சிப்புட்ட
கண்ணாடின்னு தெரியாம
ஒடச்ச அப்புறம் காட்டுதே
உன் விம்பத்தயு(ம்) நூறாக...

ஒடச்சி போட்ட எம்மனச
ஒட்டிக்கத்தா(ன்) வழியில்ல...
ஒன்னக் காட்டும் கண்ணாடிய
இன்னும் ஒடைக்கத்தா(ன்) தோனுதடா...



## போதும் போதுமே!

ஓடியாடி விளையாடிய தரை
வெறும் தரையல்ல,
பளபளவென நிறநிறமாக
மாபிள் பதித்த தரை!

உறுதியான இரு மேல்மாடிகள்
மாடிக்கு இரண்டு என்று
அழகான ஆறு அறைகள்!
சிறிதொரு மொட்டை மாடி!

இரண்டு சமையலறை,
மூன்று பூஜையறை,
நான்கு குளியலறை,
ஹூம்ம்.. தாராள வசதிதான்!

அம்மா திட்டிய போது
ஓங்கியடித்த கதவுகள்!
மழை பெய்த போது
ரசித்து மகிழ்ந்த ஜன்னல்கள்!

ஒரு நாளைக்கு ஐம்பது தரம்
ஏறி இறங்கும் படிக்கட்டுகள்!
மார்கழி ஆனதும் கோலமிட்ட
இரு தட்டு வாசல்கள்!

பார்த்து பார்த்து அப்பா
கட்டிய அழகான வீடு!
சுகம் தந்து சுவீகரித்த
அருமையான வீடு!

அண்ணா வரைந்த படத்தினை
அழகாய் தாங்கிய சுவர்கள்!
இன்று அவனது படத்தையே
தாங்குகிறது நான்கு வருடமாய்!

சுகம் தந்த வீடே
சுமையாகிப் போனது!
மனம் கொண்ட ஆசையோ
மயானமாய் ஆனது!

எத்தனை வசதி இருந்தாலும்
எதுவுமே வேண்டாமே!
அவனைத் தொலைத்த வீட்டிலே
நாம் வாழ வேண்டாமே!

அவனை இருபத்தோரு வயதிலே
பிணமாய்த் தாங்கிய இவ்வீடு
இனிமேல் மட்டும் எதைத்தான்
தாங்கிவிடப் போகிறது!

காலம் நாங்கள் வாழும்
கோலம் கண்டதா...?
அதனால் தான் இவ்வீடும்
கைம்மாறிப் போனதா?

மீனவனுக்கு கடல் சொந்தமில்லை!
மாணவனுக்கு பள்ளி சொந்தமில்லை!
வாசகனுக்கு நூலகம் சொந்தமில்லை!
ரசிகனுக்கு திரையரங்கு சொந்தமில்லை!

யாருக்கும் எதுவுமே சொந்தமில்லை!
மாயையைப் புரிந்து கொண்ட வரை
கிடைப்பது போதும் இருக்கும் வரை
போதும் போதுமே!!!
மகிழ்வாய் வாழ்ந்து சாவோமே!



## என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்

காதலென்ற பெயரில் நான் அள்ளிவீசிய
கனலாகிய காயங்களை எல்லாம்
மனதாற மகிழ்வுடன் சுமந்து கொண்டு
வானத்து நிலவாய் சுற்றித்திரிந்த
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

திருமணமென்ற ஒரு பெயரினிலே
தாய் தந்தை மறந்து ஊர் மறந்து
சொந்த உறவுகளெல்லாம் மறந்து
நான் போதுமென வீராப்பாய் வந்த
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

என்னை மனதில் சுமந்தது போதாதென
கருவிலும் சுமக்க ஆசை கொண்டு
முகம் சிவந்து வெட்கித்துப்போய்
கண்ணாடி முன் தனியாய் சிரித்த
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

மாதாமாதம் வயிற்றைப் பார்த்து
முகத்தை மூடி என் மார்பில் சாய்ந்து
என் கையையள்ளி வயிற்றில் வைத்து
"அப்பா பாரு" "அப்பா பாரு" என்ற
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

தூக்கத்தில் திடுக்கிட்டு விழித்தெழுந்து
வீச்சென்று அலறி கால்கள் உதறி
என் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு
விழி பிதுங்கி குரல் வறண்ட
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

பிரவச அறையில் ஒற்றைத் துணியோடு
நாணம் மறந்து தாகம் மறந்து
முதுகெலும்பிலே கொடும் ஊசியேற
கதறிக் குமுறி என் மடி கிடந்த
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

தனங்களில் பால் நிறைந்து மணம் வீச
தேவதையின் அழுகுரல்கூட கேளாமல்
நானிட்ட பூவும் பொட்டும் சூடியவளாய்
எங்களை தவிக்கவிட்டுச் சென்ற
என் கண்ணம்மாவை எழுப்பாதீர்கள்!

வாழ்வை எனக்காய் வாழ்ந்து கழித்த
கண்ணம்மா நிம்மதியாய் உறங்கட்டும்!
அவளுக்காய் நான் என்ன செய்யப் போகிறேன்
என் தேவதையை அன்பால் அரவணைத்து
என் கண்ணம்மாவுக்காக வாழப்போகிறேன்!



## மடுவக்கல்வி


மலை முகடுகளில் நீர் வழிய
மனித முகங்களிலும் நீர் வழிந்திடும்
மலையகத்தின் நிலைமைதனை
மனந்திறந்து சொல்லிடவே
வார்த்தைகளும் வாயடைத்து
வாழ்க்கையினை மௌனமாக்க
தேயிலைச்செடிகள் மட்டும்
இன்னும் தேனாய் இனித்திட...

கொழுந்து நிறுவை செய்யும்
மடுவத்தின் மத்தியில் மகனோ
பிஞ்சுக்கைகளில் நூல் ஏந்த
தாயின் கைகளோ தடதடத்து
நிறுவைத்தராசைத் தூக்கிநிறுத்த
தந்தையின் பிணமோ மலையில்
தேயிலைக்கடியில் புதையுண்டு
சிதைந்து சின்னாப்பின்னமாகிவிட...

நாட்டின் வரவு தேயிலையில்
ஈட்டிக்கொடுக்கும் தொழிலாளர்கள்
பிள்ளை கற்றிடவோ இடமில்லை
மடுவத்திலே பாடம் பயின்றிட
பள்ளிக்கு கட்டடமொன்று கட்டத்தான்
பன்னீர் தெளித்து அழைக்கனுமா
வேற்றுமை காட்டும் வஞ்சத்துடன்
இணைந்து நிற்கும் அரசாங்கத்தை...

மற்ற பிள்ளைகள் பயின்றிடவே
வானவில் பார்க்கும் பிஞ்சுகளும்
என்று படித்து பட்டம் பெறும்
இல்லை தேடித்தேடித் திணறிடுமா
தேயிலை சிதையே சதையாக
வெந்து வெந்து காய்ந்திடவே
தேநீர் கோப்பை விலை ஏற
தேகம் வாழ்வது எதற்காக...

மடுவம்-கொழுந்து நிறுவை செய்யும் இடம்



**கல்யாண மாயை!**



இருவது வயசாச்சி
இங்கிதமா வாழ்ந்தாச்சி
இப்போ எதுக்குத்தானோ - இந்த
இம்சையான கண்ணானோ(ம்)?

தாம்பூழம் மாத்திப்புட்டு
தாலிகட்டி கூட்டிப்போயி
நகநட்டு பூட்டிவச்சி
நல்ல நேரம் குறிச்சிக்கிட்டு...

ஒடம்புத்தான் அம்மிக்கல்லா
மனசுந்தான் குலவிக்கல்லா?
உசுர வெச்சி அரைச்சி வாழ
எதுக்கு இந்த கண்ணானோ(ம்)?

மாப்புள்ள வந்தாக்க
தேத்தண்ணி கொடுத்துப்புட்டு
விரலுல கோலம் போட,
புடிச்சுருக்குன்னு அவஞ்சொல்ல...

புடிக்கலன்னு சொன்னாக்க
அறுவா வரும் கழுத்துக்கு
குனிஞ்ச தல நிமுராம
புடிக்கிதுன்னு சொல்லிப்புட்டு...

காலம் முழுக்க ரணமாத்தான்
குமுறி அழுற வாழ்க்கையுமே
புள்ளையத்தான் பெத்தாக்க
இல்லாமத்தான் போயிடுமா?

மூனு புள்ளைய பெத்துப்புட்டே(ன்)
புருசனுக்கு வடிச்சிப்போட்டே(ன்)
இதத்தவிர அம்பதுல நான்
பாக்கப்போற சுகந்தான் என்ன?

சாதிக்க எம்புட்டு இருக்கு,
ஒடம்புலத்தான் என்ன இருக்கு!
மண்ணைத் தேடுற ஒடம்புக்கு
மகிழ்ச்சி ஒன்னும் தேவையில்ல!

வேணாம்ப்பா கண்ணானோ(ம்)
காலத்துக்கும் கஸ்டப்பட!
போதும்ப்பா இந்த வாழ்க்க
சந்தோஷமா வாழுறனே!

கண்ணானோ(ம்) பண்ணிக்கிட்டு
கண்ணக்கட்டி வாழுறதுக்கு
கண்ணானோ(ம்) இல்லாம
கண்ணத் தெறந்து வாழப்போறே(ன்)

ஆச மச்சான் வராதீஹ...
நீங்க கூட எனக்கு வேண்டா(ம்)!
சொந்தமில்லா ஒலகத்தில
சொந்தமாக்க வராதீஹ...!

கண்ணானோ(ம்)-கல்யாணம்
அம்பதுல-ஐம்பதில்

## செத்த எலிகள்


நீ முதலில் காதலித்து
கடைசியில் காதல் சொல்ல
நானும் பின்பு காதலித்து
அதனை ஏற்றுக் கொள்ள
உடனே ஒரு தலைக்காதல்
இரு தலைக்காதலாய் மாறி
உன்னில் நான் உயிராய்
என்னில் நீ உயிராய்க்கலந்து
குழைந்து இணைந்தோமே!

நீ தவித்தால் என் மனம் காட்ட
நான் துடித்தால் உன் மனம் காட்ட
தீர்க்கதரிச துறவிகள் போல்
நாம் வாழ்ந்த வாழ்க்கையிலே
உனக்காய் நான் இருக்க
எனக்காய் நீ இருக்க
என்றும் நம்முடன் நம்
அசைக்க முடியாத காதலிருக்க
விழைந்து பிணைந்தோமே!

ஏதோ காரணமாய் பேச மறுக்க
துடிதுடித்து உனைத்தேடியலைய
என் குணமும் கோரமானது
உன் மீது கொண்ட பற்றுதலால்
என்பதுவும் புரியாமல் நீ
கனலை வீசி பொசுக்கிவிட
நீ எங்கோ நான் எங்கோ என
கலைந்து தொலைந்தோமே!

யோசித்துவிட்டு நேசித்தும்
நேசித்த பின் யோசித்து
உனக்காய் வாழ்ந்த உயிரை
தூக்கி எறிந்து செல்ல
தேடித்தேடிக் கலைத்துப் போய்
உணர்ச்சிக்காய் உருவம் காட்டி
உனை மட்டும் உயிராய் எண்ணி
வளைந்து கொடுக்கின்றேனே!

அழகான நம் காதலை
ஆழமான நம் காமத்தை
இயல்பான நம் ஊடலை
ஈர்ப்பு மிகு நம் உணர்ச்சியை
உயிரான நம் கூடலை
ஊக்கத்துடன் கைவிட்ட
நாமிருவருமே என்றுமே
செத்த எலிகள் தான்!



## கடவுள் எங்கே?

காக்கும் எல்லாம் கடவுளென்றால்
கண்ணைக் காக்கும் இமை கடவுள்
உன்னைக் காக்கும் தாய் கடவுள்
உடலைக் காக்கும் தோல் கடவுள்
மழலை காக்கும் பால் கடவுள்
காலைக் காக்கும் செருப்பும் கடவுளடா!


சிலையில் இல்லா கடவுளையே
கோயில் கட்டிக் கும்பிட்டும்
படத்தை மாட்டி நிதமுமே
உருகி உருகி வழிபட்டும்
என்ன கண்டாய் வாழ்க்கையிலே
கண்ணீர் என்பதைத் தவிர்த்திட்டே?

துரும்பில் இருக்கும் கடவுளுமே
தேங்காய் நாரிலும் இருப்பாரே
குளித்து முழுகி அலங்கரித்து
தேங்காய் கொண்டு உடைத்திட்டு
என்ன பெற்றாய் வருகையிலே
விபூதி ஒன்றைத் தரித்திட்டே?

நன்றிக்கடன் செலுத்தவென
கடன்பட்டு பொங்கல் வைத்தாய்
பொங்கல் தின்றதா உன் கடவுள்
பொங்காதே எனத்தான் தடுத்ததுவா?
இரண்டுங்கெட்ட நிலையினிலே
நேரங்கடத்தும் நேர்த்திக்கடன்!

கடவுள் இல்லை வெளியினிலே
தேடித்தேடி அலையாதே
அகத்தை அறிந்து மகிழ்ந்திடவே
கடவுள் உள்ளார் உனக்குள்ளே
எண்ணம் போல வாழ்க்கையுமே
தருவார் நீயும் கேட்கையிலே!

உனக்கு கடவுள் நீயேயடா
எனக்கு கடவுள் என் மனமடா
துரோகம் என்பதை விடுத்திட்டே
துன்பம் மறந்து செயல்படடா
கடவுள் உள்ளார் உன்னிடமே
பொய்யாய் வணங்கி சாகாதேடா!



## நாட்குறிப்பும் பேசுகிறது...

ஒன்றன் பின் ஒன்றாய்
இரு தோணிப்பயணம்
வெற்றிக்கிண்ணம் சுமக்கிறது
இரண்டாம் பயணம் எனினும்
சேற்றை வாரியிறைக்கிறது
முதலாம் பயணம் முகத்தில்!

காற்றில் ஓரிறகாய்
தவழ்ந்து மிதக்கிறேன்
துப்பாக்கி ரவைகளைத்
திணிக்கிறது வாழ்க்கை
மாபிள் குண்டுகள் போல்
துளைக்கிறது துன்பம்!

முதற்பயணம் தோற்றாலும்
அடுத்த பயணத்தில் ஜெயிப்பாய்
நம்பிக்கை தளராது முயன்று
உன் பாதையில் நீயும்
வெறிகொண்டு ஓடிடு
நாட்குறிப்பும் பேசுகிறது...

## நெஞ்சு கனக்குது

ஒன்னப் பார்(ர்)க்கையில
ஒன்னும் தெரியலடி
நீ போனப்பின்ன
ஏதும் புரியலடி

அடி பொண்ணே
என்ன செஞ்சடி
என் கண்ண
தந்து போயேன்டி

வெரசா வந்தே(ன்)
எங்க போனடி
சொல்ல வந்தே(ன்)
கேக்கவில்லடி

நீயும் வந்தாக்க
வெச்சுத் தாங்குவேன்டி
விட்டுப் போனாக்க
வெந்து நோகுவேன்டி

உன் அழகுல
நா(ன்) மயங்கலடி
என் உடம்புல
நீயும் இல்லடி

இதுவர பார்(ர்)க்கல
கழுத்துக்கு கீழடி
ஆசையு(ம்) வைக்கல
மார்புக்கு மேலடி

கொஞ்சம் வந்தாக்க
திரும்பிப் பாரேன்டி
கொஞ்ச வந்தாக்க
விரும்பித் தாயேன்டி

மனசு ஏங்குது
மூச்சு வாங்குது
நெனப்பு தூங்குது
நெஞ்சு கனக்குது...



## தொடலியாய் நான்

ஒரு புள்ளியில் நான் நிற்க
இடுப்பில் கயிற்றைக் கட்டி
சமதூரத்தில் சுற்றி வருகிறது
வாழ்க்கை எனும் வட்டம்!

பாதை மாறாமல் நானோ
பயணிக்க ஆசை கொண்டு
அங்குமிங்கும் சுழல்கிறேன்
விட்டமாய் விளிம்பினிடையே!

புதுவாழ்வு வேண்டுமென
கயிற்றையும் அறுக்கிறேன்
அப்போதும் விலகவில்லை
தொடலியாய்த் தொட்டே செல்கிறேன்!

முன்பு அடைபட்டுக் கிடந்தேன்
இன்று சுதந்திரமூச்சு விடுகிறேன்
பழைய வருடல்கள் இருந்தாலும்
புதுமையைத் தேடிப் பயணிக்கிறேன்!

விட்டம்-வட்டத்தின் விளிம்பினை(பரிதி) மையத்தினூடு இணைக்கும் நேர்க்கோடு
தொடலி-வட்டத்தின் பரிதியை ஒரு புள்ளியினூடு தொட்டுச் செல்லும் நேர்க்கோடு

## கவிஞனும் தாயானான்!

எண்ணத்தின் தாம்பத்தியத்தில்
கனவு சிசு உருவாகிட
வரிகளாகிய தொப்புள்கொடி
உணர்ச்சிகளை ஊட்டிட
கருவறையில் கர்ப்பமாய்
அமைதியில் சுழன்று
கற்பனைக்குடம் உடைந்து
பேனையின் முனையிலே
மையின் வண்ணம்
பிரசவத்தின் அறிகுறியாகி
காகிதக் கட்டிலில்
குழந்தை பிறந்திட
கவிஞனும் தாயானான்!

## உன் கோபம்

அன்று நீ விரும்பினாய்
நானும் விரும்பினேன்,
இன்று நான் விரும்புகிறேன்
நீ விரும்பவில்லை,
அன்று நீ பார்த்தாய்
நானும் பார்த்தேன்,
இன்று நான் பார்க்கிறேன்
நீ பார்க்கவில்லை
அன்று நீ கேட்டாய்
நானும் தந்தேன்,
இன்று நான் கேட்கிறேன்
நீ தரவில்லை
அன்று நீ அழைத்தாய்
நானும் வந்தேன்,
இன்று நான் அழைக்கிறேன்
நீ வரவில்லை

மொத்தத்தில் அன்று இருந்தது
இன்று இல்லை,
புதிதாய்ப் பிறந்த
உன் கோபத்தைத்
தவிர!



## வீதியோரக் குப்பை

சில சந்தர்ப்பங்களில்
பச்சோந்திகள் தோல்வியுறும்
மனிதமில்லா மனிதர்களின்
நிறமாற்றம் தனிலே!

பட்டாம்பூச்சி ரசித்த
பச்சிளம் குழந்தைகளும்
கேடு கெட்ட நாய்களின்
நகக்கீறல்களில் சிக்குற!

பெற்றவளும் இருட்டுக்குள்
வெறித்தன வேட்டையில்
நாற்பது பேர் சூழ்ந்து
பால் அங்கம் கடித்திடவே!

விதியில் விலைமகளும்
விபச்சாரி பட்டத்துடன்
வீதியில் மினுமினுக்கி
உதட்டோர புன்னகையுடன்!

காயப்படும் மனங்களுக்கு
மருந்திடவோ யாருமில்லை
சாயப்பட்ட மனிதர் மனம்
வருந்திடவோ வழியில்லை!

அப்பனின் பெயரறியா
சின்னஞ்சிறு பிஞ்சுகளும்
பசிமிகுந்த கதறலுடன்
வீதியோரக் குப்பையிலே!

## தென்னிந்தியா தள்ளிய சிசுக்கள்!

தமிழ்நாட்டுப் பண்ணையடிமை,
பொருளாதார நெருக்குவாரங்கள்,
சாதிய ஒடுக்குமுறைகள்
தள்ளின ஒரு கூட்டத்து மக்களை!

பொருளாதார விடுதலை வேண்டும்
சாதித்துவ விடுதலை வேண்டும்
சாப்பாட்டுக்கு வழி வேண்டும்
மொத்தத்தில் நிம்மதி வேண்டும்...

இலங்கையில் சுதந்திர வேலை,
அதனோடு சுயகௌரவ வாழ்க்கை,
பிரித்தானியனின் பசப்பு வார்த்தை
இழுத்தன அக்கூட்டத்து மக்களை!

துரையினது தோட்டமாம்!
கொழுந்தெடுப்பது சுதந்திரமாம்!
தேயிலைக்கடியில் தேங்காயாம்!
கூடவே மாசியுமாம்! ஹா!

கேளிக்கை வார்த்தைகள்
வேதமும் ஆனதே!
இடம்பெயர்வு எங்களின்
கூத்தும் ஆனதே!

இடம்பெயர்வல்ல,
இது புலம்பெயர்வு!
புலம்பெயர்வுத்
தமிழிலக்கிய வரலாறு!

அதன் ஆரம்பமும் எதுவோ?
“மலையக நாட்டார் பாடல்கள்”
இன்று தனிப்பாதை வகுத்ததுவோ,
“மலையகத் தமிழிலக்கியம்” என்று!

முழு அங்கீகாரம் தந்தது
சர்வசன வாக்குரிமை!
வித்தியாசம் வந்தது
சனத்தொகைப் பரம்பலிலே!

தாயகம் திரும்புவதா?
வன்னியில் குடிபுகுவதா?
வெளிநாடு செல்வதா?
குழப்பம் குழப்பம் குழப்பம்!!!

இதற்கிடையில் கொடுமை!
சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்!
வெளியேறிச் செல்ல நிர்ப்பந்தம்!
மறுப்பின் நாடுகடத்தல்!

ஐந்து லட்சம் பேரின் இடைவெளி
இன்று நிரம்பியிருந்தால்
இரண்டாம் சனத்தொகை
மலையகத் தமிழர்கள்!


தெற்கில் வன்செயல்,
வன்னியில் பாதுகாப்பு!
தஞ்சம் புகுந்தனர்
மிகுதி அடிமைகள்!



SE1-04 Slide A

ஓரிரண்டு வெளிநாடோட
மிச்சமெல்லாம் நொந்து நொந்து
நூலாய்ப் போன வரலாற்றை
எங்ஙனம் சொல்ல...

தாயகமோ இந்தியா
வாழ்வதோ இலங்கை
பெயரோ இந்தியத்தமிழர்
சொந்தமும் எதுவோ???



## மழைக்காதல்



மேகம் கண்ணீர் சிந்த
காளான் குடை விரிக்க
நத்தை நகர்ந்து வர
எத்தனையோ ஆசைகள்
ஒரு குடை இணைந்து
கைக்கோர்த்து கால் நடந்து
தோள்சாய்ந்து கரைகடந்து
நான் விழ நீ தாங்க
மார்போடு மார்பாக
நீ சாய்க்க நான் தூங்க
குடை பறக்க உடை நனைய
கைகள் எனை மறைக்க
கண் மட்டும் கண் நோக்க
நெற்றியில் வழியும் நீர்
மார்பில் புகுந்து கொள்ள
எட்டிப்பார்க்க விட்டுத்துடிக்க
இதயம் படபட காலோ கடகட
அருகில் வரவர அள்ளித் தரதர
ஐயோ எல்லாம் கனவா...

## விதவை நான்

வானதூதுவர் மத்தியிலே விரலிட்ட
மோதிரமோ ஒளிமங்கிக் கிடக்க
கர்த்தரை நோக்கி அழைத்தேனே
இனியொரு வாழ்வு வேண்டாமய்யா!

ஆசைப்பட்ட அக்னிகுண்டம் வெந்து
காமப்பட்ட என்னுடலோ வலம் வந்து
கழுத்தில் ஏறிய தாலிக்கயிறு
சரிந்து சாம்பலாகிப் போனதுவே!

முக்காடிட்ட முகப் புன்னகையோ
நிக்காஹ் செய்ய மனமுவந்துதான்
துஆ செய்து மனங்கலங்கியது
அல்லாஹ்வே எனைக் காத்தருளும்!


மணி ஒலிக்கையிலே ஆராதனை
நிதமும் வாட்டிடுமே என் வேதனை
ஏரோதிடம் தப்பிய குமாரனே எனை
கொஞ்சம் ஏரெடுத்துப் பாருமைய்யா!

இன்று வரை வைக்கவில்லை பொட்டு
நான் உனை இழந்த நாள் தொட்டு
இனியும் வரவேண்டாம் அபலைக்கு
பொட்டிட்டு பூவும் சூடி அலங்கரிக்க!

காதல் ஹராம் என்று நன்கறிவேன்
காத்திருந்தேன் நிக்காஹ் செய்ய
அதன் பின்னே இணைந்திட ஆசைதான்
இனி வேண்டாம் எனக்கு எதுவுமே!


இப்படியெல்லாம் கண்ட கனவு
நொந்து நொந்து தணிகிறதே!
இனியொரு சுகம் வேண்டுமா
உனையிழந்த இந்த பாவிக்குமே!

**நீங்கிச் சென்ற நீ என் மனதில் மரணித்துவிட்டாய், தாங்கி நின்ற நான் இவ்வுலகில் விதவையாகிப் போனேன், திருமணம் என்ற ஒன்று நிகழாத போதிலும்...**





## வெள்ளைத் தேங்காய்கள்



வெண்மேகம் நீந்துவதாய்
வெள்ளைத் தேங்காய்கள்
நாடெங்கிலும் பரவிக்கிடக்க
பார்த்தவுடன் பரவசமே!

வெண்ணிற ஆடைகளும்
கையில் பூக்கூடைகளும்
ஊதுபத்தி மணத்துடனே
ஆஹா! மெய்ம்மறந்து போகுமே!

தூபிகளின் தூய்மை
மனதினில் அமைதி
பார்த்தவுடன் ஈர்த்திடும்
புத்தர் வதனப் பிரகாசமே!

நல்லதை யோசித்தார்
நல்லவை போதித்தார்
என்னதான் செய்துவிட்டோம்
சிலை வைத்ததைத் தவிரவே!

## உயிரிழுத்த உயிரெழுத்து

அன்பு என்ற ஒன்றை
அழகாய்த் தந்து
அரவணைத்து -என்னை
அடிமையாய் ஆக்கிய
அன்பனே - உனது
அதிசயப் பார்வையால்
அருகில் வந்து இறுக
அணைத்த என்னை
அணைத்துவிட்டுச் சென்றாயே
அகல் விளக்காய்!

ஆசை முகம் பார்த்து
ஆறா காமம் கொண்டு
ஆழமாய்க் காதலித்த
ஆணின் மனமும்
ஆதர்சன வாழ்வளிக்குமென
ஆணித்தரமாய் நம்பி
ஆவி சிலிர்த்துப்போன நான்
ஆச்சரியம் அடையும் படி
ஆட்டிப்படைத்ததே உன் காதல்
ஆழிப் பேரலையாய்!

இன்பவெறி கொண்டு
இருவரும் தத்தளிக்க
இடையிலே விதிகூட
இனம்புரியா சதி செய்து
இரக்கமின்றி நம்மிருவரை
இக்கட்டான சூழ்நிலைக்கு
இழுத்து வந்து குழியில்
இட்டு மூடிச் சென்றதிலும்
இனிமை காண்கிறாயே
இதழ் மூடியவனாய்!

ஈச்சம்பழ உன் உதட்டால்
ஈகை முத்தம் தந்த
ஈரம் கூட உலராமல்
ஈரைந்து வருடம் வாழ்ந்து
ஈன்றவள் மறந்து உன்
ஈர்ப்பிலே வயப்பட்டு
ஈசன் பாதி சக்தியாய்
ஈட்டிக்கொண்ட அன்பினை
ஈட்டியால் குத்தி எறிந்தாயே
ஈமைச்சடங்காய்!



## தனிமை

என்னைச் சுற்றிலும் மனித நடமாட்டம்!
தெரியா முகங்கள் புன்னகைக்க
தெரிந்த முகங்கள் விலகிச் செல்கின்றன
தெரியாததைக் கண்டது போல...!

நான்கு நாள் உபசரிக்கும் உற்றத்தார்
ஐந்தாம் நாள் முகம் சுளிக்கையில்
நமக்கென்று ஒரு உறவில்லையே என
வாடும் மனதோ ஒரு பிணக்குழிதான்!

கருவறையில் நான் கிடந்த கிடப்பு
எனைவிட்டு அகலவில்லை போலும்
அதே இருட்டறை கல்லறை வரை
தொடரும் கோலத்திற்கோ பிறந்தேன்!

இவ்வாறான சுளிப்பும் வெறுப்பும்
மனத்தின் மரணமும் நிழலாய்
என்னுடன் தொடரும் வரை
என்றுமே ஒன்றுதான் சொந்தம்

அதுதான் என் தனிமை!!!




## தெரியவில்லை!

உன் கால்களுக்குத் தெரியும்
எனது வேகம் என்ன என்று
எனது வேகம் தவறானது என்று
இப்போது புரிந்து கொண்டேனே!
இப்போது புரிந்து கொண்டாலும்
என் அருகில் இல்லாமல் போனாயே!
என் அருகில் இல்லாமல் போனாலும்
அன்பாய் இருக்கின்றாயே இதயத்திலே!
அன்பாய் இருக்கின்ற இதயத்திலே
இரத்த ஓட்டமாய் உன் நினைவுகளே!

நினைவை சுமக்கும் உன்மடிமீது
தலைசாயாமல் போவேனோ!
தலை சாய மடி தராமல் நீ என்
உயிர் போக வழி தருவாயோ!
உயிர் போக வழி தந்தாலும் அது
உன்னுடன் போகத் துடிக்கிறதோ!
உன்னுடன் போகத் துடிக்கும் உயிருக்கு
மருந்தாக நீயே வருவாயோ!
மருந்தாக நீயே வந்தால்
விருந்தாக ஏற்றுக் கொள்வேனோ!
விருந்தாகவே நீ வந்துவிட்டால்
பருந்தாக பற்றிக் கொள்வேனோ!


தெரியவில்லை!!!



## மனமெனும் கதவு

கைபிடியைக் காணவில்லை
உன் மனமெனும் பெரும்கதவில்
என் கைபிடிக்கவே திறந்தாயோ
இப்போது தான் புரிகிறது
உள்ளிருந்து மட்டுமே திறக்க முடிந்த
அரும்கதவு அதுவென்று
யாராலும் திறக்க முடியாத கதவை
எனக்காகவே திறந்து இப்போது
எதற்காகப் பூட்டிக்கொண்டாய்?

திறப்பு தேடித் திணறுகிறேன்
வாசற்படியில் துயிலுகிறேன்
தட்டித்தட்டிப் பார்க்கின்றேன்
விட்டில் பூச்சியாய் சுற்றுகின்றேன்
கட்டிலில் புரண்டு விழுகின்றேன்
தலையணை அள்ளிக் கிடக்கின்றேன்
முத்தம் பதித்து முகர்கின்றேன்
காலம் முழுதும் காத்திருப்பேன்.



## தேநீர்க்காதல்



ஆடை அகலும் வேளையிலே
முந்திப்பாய்ந்து முகர்ந்திட்டே
இதழோ உமிழ்நீர் சுமந்திடவே
உறக்கம் இமையை மூடுகையில்
சோம்பல் முறித்து எழுந்திட்டே
ஆவி பறக்கும் பொழுதினிலே
அருந்திட ஆசைதான் - அந்த
ஒரு கோப்பைத் தேநீரை!

## கூற்றுவன் நான்

காதலித்துக் கட்டினேன்
காயங்களும் தந்தேனே!
பேதலித்து நிற்கின்றேன்
பெருஞ்சுமையும் ஆனதே!

சண்டை போட்டாய் என்னிடம்
தாயிடம் தாழ்த்திப் பேசவே
மண்டை உடைய அடித்தேனே
நானும் உனக்கு புருஷனா?

தலையணை எறிந்தாய் என்மீது
பறந்ததோ வெறும் பஞ்சு தானே
நானெறிந்த வார்த்தையிலே
உடைந்தது உந்தன் நெஞ்சமுமே!

தலையைப்பிடித்து கதறினாய்
துடியாய்த் துடித்து வீழ்ந்தாயே
தலைக்கணம் பிடித்து நானோ
தூக்காமல் தாக்கி நின்றேனே!

மீண்டும் எழுந்து வந்தாய்
காலைக் கட்டிப்பிடித்தாய்
மாறா வெறுப்பில் நானோ
எட்டியும் உதைத்து விட்டேனே!

கால்களில் வழிந்த குருதியுமே
என்னுயிரைக் கொன்று தள்ளியதா?
எனக்கு தெரியாமல் போனதுவா
உனக்கு சிசு தந்த இடமதுவென்று!

“அம்மா” என்ற சத்த அலறல்
என்னைத்தான் நீ அழைத்தாயா
கீழே சொட்டிய இரத்தமும் தான்
உன்னை அப்படி அழைத்ததுவா?

அதுவரை நானும் அறிவிலியா
இரத்தம் கண்டுதான் பயந்தேனா?
கால்கள் விரித்துப் பார்த்தேனே
கைகளில் சிசுவின் துகள்களுமா?

ஐயோ நெஞ்சம் வெடிக்கிறதே,
கையில் குருதி நிறைகிறதே!
அள்ளி வந்தேன் உன்னையுமே
ஆண்மை என்னைக் காறித்துப்ப!

தெரியாது நீ கர்ப்பம் என
தாதி எனக்கு சொல்லும்வரை!
என்ன பதில்தான் சொல்வேனோ
நீயும் கண்திறந்து பார்க்கையிலே!

கண்கள் மெல்ல திறக்கிறதே
கண்ணீர் கீழே வழிகிறதே
வாயும் ஏதோ முணுமுணுக்க
நெருங்கிக் கேட்கிறேன், "சாப்பிட்டியா?"

உயிரைத் துளைத்து இறங்கியதே!
என்னை உயிராய் சுமப்பவளே!
உன்னைக் கொடுமை செய்தேனா
நான் தாய்மை பறித்த கூற்றுவனா?

கையோ உன் கால் பிடிக்க
காலம் உன் பால் குடிக்க
"மன்னிப்பாயா கண்மணியே,
குழந்தையை நான் கொன்றேனே!"



"என் குழந்தை சாகலையே
பக்கத்துலயே இருக்கானே"
கைகள் வருடின தலையையுமே!
இவள்தான் எனக்கென்றும் தாயுமே!

## வருவாயா வழித்துணையாய்

துணையாய் இருப்பேன் என்றாய்
துகளாய் காற்றில் பறந்தாய்
சல்லடை தேடினேன் பிடித்திட....
நீ நடந்த பாதைகள் இன்று
நான் நடந்திடும் சுடுகாடு
பிணமாய் திரிகிறேன் துடித்திட...
மனம் மட்டும் ஏனோ நித்தம்
கேட்டுத்திரிகிறது உன் முத்தம்
கண்களும் கண்ணீர் வடித்திட....
பெண்மை துடித்திடும் நினைவு
ஆகிவிட்டதோ வெறும் கனவு
மனமும் இல்லை நடித்திட....

சொல்லிச்சென்ற வார்த்தைகள்
குளிர்ச்சி தந்த தடம் மாறி
வெந்துத்தணிகிறது இப்போது...
பார்த்துச்சென்ற பார்வைகள்
சாரல் வீசிய சுவடழிந்து
அனலையெறிகிறது இப்போது...
துணை என இருந்த இருப்பு
வினை என நினைக்கும் அளவு
ஆவியழிகிறது இப்போது...
வாழ்க்கைத்துணையாய் இல்லாமல்
வழித்துணையாய் சரி வருவாயென
ஏங்கி ஏங்கி உயிர்க்கிறேன் இப்போது...



## பிரிவினை

ஆசை வெறியில் வழிகெட்ட நம் சமூகம்
புனிதத்தைப் புண்ணாக்கிப் போட்டது!
உண்மையாய்க் கலந்த கலப்பைக் கூட
தவறென்று மறுக்கிறது நம் கலாசாரம்!
போதைப்பொருள் பாவனையும் மனதின்
கோளாறும் கற்பினைக் களவாடுகிறது!



எத்தனை எத்தனை கனவுகள்...
எத்தனை எத்தனை ஆசைகள்...
ஏனிந்த உலகம் பெண்ணை
மண்ணாகவே பார்க்கின்றது?
ஆணுக்கு இருக்கும் அதிகாரம்
பெண்வசப்பட்டால் இதுவே நிலைமையா?

இரு உயர் இணைவது காதலானது
இரு உடல் இணைவது கோரமானதே!
அழகிய உறவு சிசுவை பிரசவிக்க
அடக்கிய உறவு சவத்தை பிரசுரிக்கிறதே!
ஏனிந்த நிலைமை என்று கேட்டால்
தலைகுனிந்து செல்கிறது நம் சமுதாயம்!

குணத்தில் ஆண்களில் பிரிவினையா?
மனத்தில் ஆசைகளில் பிரிவினையா?

## தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா?



எத்தனை முறை பார்த்தாலும்
உனக்கேதும் ஈடில்லை
உன் அழகில் நான் மயங்கி
போனதுவும் பாடில்லை
இப்பொழுதும் தேடுகிறேன்
உன் ஒளியும் எங்கென்று
தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா
காதலனும் ஏட்டுப்பூக்கள்?


அழகுண்டு இதழுண்டு
நிறமுண்டு மணமுண்டு
தேனுண்டு தேகமுண்டு
காம்புண்டு கனியுண்டு
பாசத்தில் நான் துடிக்க
பறித்துவிட நீயில்லை
தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா
காதலெனும் ஏட்டுப்பூக்கள்?

நீரூற்றிப் பார்க்கின்றேன்
நிறம் கலங்கிப் போகிறது
ஒளியூட்டிப் பார்க்கின்றேன்
இதழ் மங்கிப் போகிறது
பாடலொன்று நீ பாடி
அருகில் வந்து நிற்கையிலே
தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா
காதலெனும் ஏட்டுப்பூக்கள்?

மிக அழகாய் பதித்து வைத்து
நிறமெனும் ஒரு வரம் தந்து
கண்ணெதிரே காட்டிவிட்டு
கண்காணாமல் போனாயே
நீ வந்து தருவாய் உயிரென
காத்திருக்கும் காலமுமே
தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா
காதலெனும் ஏட்டுப்பூக்கள்?

வேண்டாம் என்கின்றன
என் விரலை இனங்கண்டு
வேண்டும் என்கின்றன
உன் விரலின் சுவடறிந்து
நீ வந்து தொட்டால்தான்
மலர்வேன் எனப்பிடிவாதம்
தொடத்தொடத்தான் மலர்ந்திடுமா
காதலெனும் ஏட்டுப்பூக்கள்?

## காதல் சொல்லவோ வந்தாய்



ஏன் கடலே இந்த தயக்கம்
வந்து வந்து போகிறாய்
என்றுரைப்பாய் உன் காதலை
வெயிலில் தகிக்கும் என்னிடமே!

உஷ்ணம் தணிக்க வந்தாயோ
உரசிச் சென்றிட வந்தாயோ
நித்தம் வாடிக் கிடக்கின்றேன்
மோதி மோதிச் செல்வதுமேனோ?

அந்த மதியின் மீது மயக்கமா
சிவந்த முகமென மோகித்தாயா
நம்பாதே அவள் சென்றுவிடுவாள்
நான் உனக்காய் என்றும் இருப்பேன்

"வருவதும் போவதுமாய் இருக்கிறானே"
என்மேலோடும் நண்டும் கேட்கும்
ஓர்நாள் வருவாயெனக் கூறவா
வரவேமாட்டாயெனக் கூறிடவா?

என்னில் கட்டும் மணல் வீடுகளை
அழித்ததும் கொண்ட கோபத்தாலா
எனக்காய் ஒரு வீடு கட்டிடவே
இடமும் ஒதுக்கிப் போட்டாயா?

என் காதல் கடலே போகாதே
அக்கரையில் அவள் சிரிக்கின்றாள்
விடிந்ததும் விட்டுப் போய்விடுவாள்
அதன்பின் என்னிடம் வாராதே

போபோ அவளுடனே போ!!!

## உன் அகலிகை கல்லானேன்

என் கோதமா...
உனக்காய் எழுதுகிறேன்
மரணத்தின் விளிம்பில்
மன்னிப்புக் கடிதம்
நீ தந்துவிட்டஆசை
நீ தந்துவிட்ட முத்தம்
நீ தந்துவிட்ட சுவையும்
சுகமாக இருக்கும் என்றாலும்
சுமையாகவும் கனக்கிறது...

மீண்டும் உன் சந்தேகம்
என்னை என்ன செய்யும்
என்பதறியாது தூக்கிப்போட்ட
அது இடத்தில் அதே நினைப்பு
துடிதுடித்து தவிதவிக்க
காலமும் காத்திருப்பேன்
உயிர்ப்பிக்க எவனோ ஒரு
ஸ்ரீராமன் வரவேண்டாம்
நீயேதான் வரவேண்டும்...

நீ தொட்ட சுவடுகள் மாறாது
நீ தந்த மூச்சு சாகாது
சந்தேகம் அள்ளி வீசினாலும்
உனையெண்ணியே கிடப்பேன்
உனையள்ளியும் அணைப்பேன்
காட்சிப் பிழைக்காய் வருந்தி
உன் அகலிகை கல்லானேன்...



## சக்கைகள்


அடர்ந்த காடுகளை
அழகிய பாதையாக்கி
மலைகளைக் குடைந்து
சுரங்கங்கள் அமைத்தோம்
பசியதனை உணர்ந்தோம்
பட்டினியில் மாண்டோம்!

வெள்ளையனின் சாபமாய்
இரு நூறு ஆண்டுகள்
ஏமாந்ததும் போதாதென
இன்னமும் ஏங்குகிறோம்
ஒரு பிடி உணவுக்காக
ஐம்பது ரூபா கேட்கிறோம்!

தேயிலையில் தழைத்து
தேநீரில் சாயமாகி
தோட்டக்காட்டான் என்றே
புறமும் ஒதுக்கப்பட்டு
வெறும் சக்கைகளாக
தூக்கி எறியப்படுகிறோம்!



## கட்டிப்போட்டாயோ நீ



அனைத்து உறவுகளும்
என் வசமிருந்த போது
நீ மட்டும் போதுமென
வாழ்ந்த என் வாழ்க்கையில்
இன்று எந்த உறவுக்கும்
இடமில்லை என ஆகும் போது
நீயும் இடம் மாறிப் போனதேனோ
என் செல்வமே!

தனிமையில் தவிக்கிறேன் என்று
சொல்வதைக்காட்டிலும் தனிமை
என்னால் தவிக்கிறது என்பதே
உண்மையாகிப்போன நாட்களிலே
நீயும் நானும் சேர்ந்திருந்த தருணம்
தீயில் விழுந்த புழுவாய்
எனை ஆக்கியது!

புரண்டு புரண்டு அழுதாலும் உன்
மழலை மாறா புன்னகை மட்டும்
கன்னங்களில் முத்தமிட்டுச் செல்ல
நீ சென்ற பாதை தேடி ஓடி வர
கால்களில் நீயிட்ட சங்கிலியும்
எனையிழுத்துக் கட்டிப்போடுகிறது
கட்டிலின் கால்களிலே
தினம் தினம்!

## என்ன செய்வது?

கைகள் விறைத்தன
விரல்கள் நடுங்கின
கண்கள் இருட்டின
கால்கள் கடுத்தன
அமர்ந்திருக்கிறேன்
ஒரு முப்பது நிமிடமாய்!

மனதில் பதட்டம்,
ஐயோ வந்து விடுவாரோ!
மதியில் தயக்கம்,
ஐயோ தந்தும் விடுவாரோ!
முகத்தில் வியர்வை வழிய
உடல் வெப்பம் அதிகரித்தது
மிகவும் ஆக்கிரோஷமாய்!

நாலா புறமும் பலகண்கள்
கவனிப்பது போன்ற உணர்வு!
ஏதோ பயம் மூளையைப்
போட்டுக் குடைந்தெடுத்தது!
என் விரல்களோ சொடுக்கு
எடுத்துக் கொண்டிருந்தது
கடிகாரத்தைப் பார்த்தவாறே!

வரும் நேரமாயிற்றே!
ஐயகோ! என்னுள் பெரும்
உதறல் தலைதூக்கியது
என்ன செய்யப் போகிறேன்
ஏது செய்யப் போகிறேன்!
மனது அலாறம் அடித்தது
எழுந்து ஓடி விடுவோமா என்று!

நிச்சயம் ஓட முடியாது
பிடித்து இழுத்து வந்து
அமர்த்தி விடுவாரே!
முகமோ வியர்த்தொழுக
கைகளோ ஐஸ்கட்டியானது!
ஈடுபாடே இல்லாத செயலுக்கு
எவ்வாறு நான் சம்மதிப்பது!

காதலன் காதலிக்கு
முத்தம் கொடுப்பதைப் போல்
நிமிட முள் தொட்டது
மெதுவாக பன்னிரண்டை!
பார்த்ததும் மெதுவாய்
இறங்கியது எச்சில்
தொண்டைக்குழிக்குள்!

வருகிறார் என்னை நோக்கி!
வந்துவிட்டார் மிக நெருங்கி!
கண்களை இறுக மூடிக்கொண்டேன்
வேகமாய்த் தந்து சென்றார்
முகம் சிவந்து போனேன்!
மெதுவாய் எடுத்துப் பார்த்தேன்
சுலபமாய்த்தான் இருந்தன
வினாக்கள் வினாத்தாளில்...!



## நாகரீகப் பிறழ்ச்சி

பேனைக்கு இடமில்லை
வீணைக்கும் நரம்பில்லை
கணினி மட்டும் கம்பீரமாய்
தட்டச்சு இட்டிருக்க...

மரங்களுக்கு நாதியில்லை
கரங்களுக்கும் மதிப்பில்லை
வலைதளங்கள் ஒய்யாரமாய்
பொழுதினைப் போக்கிவிட...

பாலூட்ட பணியவில்லை
பசிகூட தணியவில்லை
காதுகளில் தலையணியோ
பாடல்கள் இசைத்துவிட...

முகம் பார்க்க நேரமில்லை
விருந்திற்கு விழையவில்லை
கைபேசிகள் கனவிலுமே
கண்ணாமூச்சி ஆடிவிட...

கைக்கெட்டும் தூரத்தில்
விண்வெளி சாகசங்கள்
இதுவே நவீன வளர்ச்சி
நாகரிகம் மறந்த பிறழ்ச்சி!

## மரண மூச்சு

இந்த நொடி சொந்தமில்லை
மறுநொடியில் உயிர் பிரிந்தால்
காத்துவந்ததோ நிலையில்லை
வரும் வழியில் எடுத்துச்செல்ல...

காயப்படுத்தி வாழ்ந்துவிடலாம்
காயப்பட்டும் தாழ்ந்துவிடலாம்
காயமும் ஆகுமே சாயமாய்
காலவிளிம்பில் நாம் கிடக்கையிலே...

தலங்கள் போகிறோம் புண்ணியமா
சிலையைத் தொட்டால் பாவமுமா
எதுவுமே இல்லை அண்டத்திலே
மனம் மட்டுமே ஏன் வஞ்சத்திலே...

விரும்புவதும் நடந்துவிடாது
நடப்பதையே விரும்பிவிடு
பிறர் விருப்பை நிறைவுசெய்
உன் விருப்பு நிறைந்துவிடும்...!

வெறுப்பென்பது நிலையல்ல
உண்மையையே யாசிக்கும்
துண்டாய் நொறுக்கிய இதயம் கூட
மரணப் பொழுதில் மூச்சுவிடும்...!

வார்த்தைகள் வாழவைக்கும்
வாழ்க்கையோ செயலுணர்த்தும்
அன்பில்லை என்றாலுமே
அன்பே என்றால் உயிர்த்துடிக்கும்...!

என்னவோ நியாயம் இருக்கட்டும்
ஏதேதோ மாயம் நடக்கட்டும்
எல்லாமே ஒரு மாயை என்று
மரணமூச்சு உணர்த்திவிடும்...!

## வெற்றிடம்

அன்பே!
காதலிக்கும் போதும் சண்டைகள் போட்டாய்,
தன்னந்தனியே தவிக்க விட்டுச் சென்றாய்!
உன்னைத் தேடியலைந்து பிடித்துக் கொண்டேன்,
என் வாழ்வின் துணை நீமட்டுமென...

படுக்கையில் பாசம் பகிர்ந்தேன்
நீயோ விஷமெனும் வார்த்தைகளையே
அள்ளி அள்ளியெறிந்தாய்!
இப்போது தள்ளாடும் வயது,
காமத்துக்கு காலம் கடந்ததென்றாலும்
என் காதலுக்கு கரையில்லை!

கண்ணே!
கொஞ்சம் திரும்பிப்படு,
என் கண்ணீருக்கு தலையணையை
ஈரமாக்க முடியும் என்றால்
உன் இதயத்தை ஈரமாக்கிட
முடியாமல் போனதுவா?
உன் இதயம் கல் இல்லை,
என் கண்ணீர் அமிலமுமில்லை
அது கரைகையில் எனது இந்த இடம்
வெற்றிடமாகிப் போய்விடுமே!

பண்டிகைக்கு மட்டும் கூடத்தாடி
அலப்பறை செய்துவிட்டு
மறுநாள் கிழிதெறிந்து செல்லும்
சிலந்திவலைக் கூட்டுக்குள்ளே
நான் மட்டும் ஏனோ
சிலந்திகளில் ஒன்றாயின்றி
விட்டில் பூச்சியாய்!
************************

நிழலே!
என்னைவிட்டு நீங்கிவிடு
நீ எப்போதும் என்னைப்
பின்தொடர்வது தெரிந்தால்
அவள் மனந்தாங்க மாட்டாள்!
************************

ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளை
அள்ளி அள்ளி இரைத்து -என்
இதயத்தை உடைத்துத் தள்ளுகிறாய் -அது
உன் முகம் காட்டும் கண்ணாடி
என்று தெரியாமல்!
உடைத்து உடைத்து உன்னுருவத்தை
ஆயிரம் ஆக்கிக்கொண்டிருக்கிறாய்!
************************

இழப்பு எனக்குப் பழக்கம்
விதியும் மதிக்கு நெருக்கம்
பிரிவு என்ற போதை
அகலவில்லை பாதை!
************************

நான் உன்னையே சுற்றி சுற்றி
வருகிறேன் என்றால் எனக்கு
போவதற்கு வேறிடமில்லாமலில்லை
எனக்கு நீ வேண்டும் என்பதால்!
************************

நிலவே!
உன் முகம் நதியில் தெரிய வேண்டாம்
ஓர்நாள் நீயே சந்தேகிக்கக் கூடும்
நான் கள்ளக்குடித்தனம் நடத்துகிறேனென்று!
-இப்படிக்கு
நிலாக்காதலன்
************************

கிழித்தெறியத் தோன்றுகிறது
எப்பொழுதும் உன்னைக்
கட்டியணைத்துக் கொண்டிருக்கும்
அந்த சட்டையை!
************************

எழுதுகிறேன் வரிகள்
அன்பின் விளிம்பில்
நாலாப்புறமும் சிக்கி
தொலைந்த களைப்பில்
மீள முடியாதெனினும்
வாழ வேண்டுமென்றே
மரணத்தின் வழியில்
மன்னிப்புக் கடிதம்!
************************

அழுதேன் புலம்பினேன்
எழுந்தேன் விழுந்தேன்
மேலும் மிதித்தது காதல்!
உறவில்லை ஆறுதலுக்கு
தாயில்லை ஆதரவுக்கு
கைகொடுத்தது கல்வி!
************************

ஏங்கி நின்ற என்னை
சொன்ன வார்த்தை கொல்ல
தேக்கி வைத்த கண்ணீர்
நதியாய் கலங்கி ஓட
ஒரே ஒரு நொடியில்
தூக்கில் மாட்டிச் சென்றாய்!
************************

முத்தங்களின் சத்தம்
காதையடைக்குதடி கண்ணம்மா
கண்ணீர் வழியுதடி -உந்தன்
இதழீரம் மட்டும் உலராமல்
நினைவுகளைப் பிழியுதடி!
************************

என் மூச்சுக் காற்றும்
போர் புரிகிறது உன்னைப்
பார்க்கும் நொடிகளிலெல்லாம்!
************************

உன்னைப் பிடிக்காது என்று
கூறும் மனிதர்கள் மீது எனக்கு
வரும் கோபத்தைக் காட்டிலும்
உன்னைப் பிடிக்கும் என்று
கூறும் மனிதர்கள் மீது எனக்கு
வரும் கோபமே பெரியது!
************************

நீ வீடு திரும்பும்
பொழுதுகளிளெல்லாம்
வாசற்கதவருகில்
உன் வியர்வை துடைக்க
காத்திருப்பேனே
என் முத்தங்களால்!
************************

உன்னை கூட்டிச்செல்லவே
பயமாய் இருக்கிறது -என்
ரோஜாத்தோட்டத்திற்கு
பூக்கள் என்னுடன் போருக்கு
வந்துவிடுமோ என்று
ஏன் இவ்வளவு அழகாய்
ஜனித்தாயோ?
************************

காதலியே!
நான் பிறக்கும் போது நீ
கருவறை இருட்டில் கிடந்த
காரணத்தினாலா
என் வாழ்க்கையையே
இருட்டாக்கிச் சென்றாய்!
************************

# நன்றி



ISBN 978-624-95370-0-2

விலை - 300.00